**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.1/2021 இன் அ.வ.எண்.86/2021**

1. அழ. ராமராசு
2. சக்திதேவி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ச. காளிமுத்து
2. கா. ராமமூர்த்தி
3. கா. லட்சுமணமூர்த்தி
4. கா. பழனிமுருகன்
5. பஞ்சவர்ணம் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 04.01.2023 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.எம்.விஜயக் குமார் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.என்.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது வழக்கு 'ஏ' செட்யூல் சொத்தை 1ம் மனுதாரர்/1ம் வாதி அமைதியாக அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ எவ்வகையிலும் தடை இடையூறும் செய்யக்கூடாது என இம்மனு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் அசல் வழக்கு முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழக்கு 'பி' செட்யூல் சொத்தை 2ம் மனுதாரர்/2ம் வாதி அமைதியாக அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி களோ அவர்வகை ஆட்களோ எவ்வகையிலும் தடை இடையூறும் செய்யக்கூடாது என இம்மனு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் அசல் வழக்கு

முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் கட்டளை 39 விதி 1,2 ன் படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

மனுச் சொத்துக்களான 'ஏ' மற்றும் 'பி' செட்யூல் சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் 25.04.1968ம் தேதிய கிரையப் பத்திரம் மூலமாகவும் 03.07.1968ம் தேதிய கிரையப் பத்திரம் மூலமாகவும் கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி கிரைய சொதததை 1ம் மனுதாரர் கிரையம் பெற்று சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. மேற்படி கிரையம் பெற்று கிரைய காலம் முதல் 1ம் மனுதாரர் தனது சொந்த பாத்தியத்திலும் அனுபவத்திலும் வைத்து தொடர்ந்து எவ்வித இடையூறும் இன்றி சட்ட காலத்திற்கும் மேலாக அமைதியான முறையில் அனுபவித்து வருகிறார். தாவாச் சொத்தை தான் கிரையம் பெற்று அனுபவித்து வருவதில் தன் பெயரில் பட்டா ஏற்பட்டு தன் பெயரில் தீர்வை செலுத்தி சட்ட காலத்திற்கு மேலாகவே அமைதியான முறையில் அனுபவித்து வருகிறார்.

(ஆ) இந்நிலையில் தனது மகளான 2ம் எதிர்மனுதாரர் படித்து முடித்து வேலை இல்லாமல் இருந்ததில் தாவாச் சொத்தின் ஒரு பகுதியில் பண்ணை அமைத்ததில் அதற்கு மானிய கடன் பெற சொத்து பாத்தியம் வேண்டும் என்ற நிலையில் தான் கிரையம் பெற்ற சொத்தின் வடபுறத்தில் கீழ்புறம் மற்றும் நடுவில் பிராது தபசில் 'பி' செட்யூல் சொத்துக்களை 2ம் மனுதாரருக்கு கடந்த 23.01.2009ம் தேதிய கிரையப்பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார். அதுமுதல் வழக்கு 'ஏ' செட்யூல் சொத்தை 1ம் மனுதாரரும் 'பி' செட்யூல் சொத்தை 2ம் மனுதாரரும் பாத்தியம் அடைந்து தனித்து அனுபவித்து வருகின்றனர். தாவாச் சொத்து தரிசாக இருந்ததில் அதனை கிரையம் பெற்று நிலத்தை பயன்படுத்தி விவசாயம் செய்து தான் அனுபவித்து வந்ததில் நாளடைவில் யூகலிப்டஸ் மரங்களை வைத்து வளர்த்து அதன் பணப்பலன்களை பெற்று அனுபவித்து வந்த நிலையில் வழக்குச்சொத்திற்கு சிறிதும் சம்பந்தமில்லாத எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவாச் சொத்தை எப்படியும் அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவாச் சொத்துக்களில் 2016ஆம் ஆண்டு முதல் வீண் பிரச்சினைகள் செய்து வந்தனர். இதனால் காவல் துறையினர் தாவாச் சொத்தை சர்வேயர் வைத்து அளவீடு செய்யவேண்டும் என்று கூறியதன்பேரில் தாவாச் சொத்தை

சர்வேயர், விஏஓ உதவியுடன் அளவீடு செய்ததில் எதிர்மனுதாரர்களின் சொத்து எதுவும் தாவாச் சொத்தில் வரவில்லை என்று கூறிவிட்டனர். இதனால் கோபமடைந்த எதிர்மனுதாரர்கள் வருவாய்த் துறை அதிகாரிகளையும் 1ம் மனுதாரரையும் தாக்கியதால் 1ம் மனுதாரர் உயிர் பாதுகாப்பு வேண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கொடுத்தார். இதுபோல் எதிர்மனுதாரர்கள் தாவாச் சொத்தில் 1ம் மனுதாரரின் பாத்தியதையையும் அனுபவத்தையும் பல்வேறு வகையில் இடையூறு செய்து வருகின்றனர். எதிர்மனுதாரர்கள் தாவாச் சொத்தில் மனுதாரர்களின் பாத்தியத்தையும் அனுபவத்தையும் ஏற்கனவே ஒப்புக் கொண்டு, அதனை மறைத்து அ.வ.எண்.94/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளதில், எதிர்மனுதாரர்கள் எஸ்டோப்பல் தோசத்தால் தடை செய்யப்பட்டுள்ளனர்.

(இ) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அடியாட்கள் துணையுடன் வந்து எப்படி யேனும் தபசில் சொத்துக்களை ஆக்கிரமித்து கைப்பற்றுவோம் என்று பகிரங்கமாகக் கூறி வருகிறார்கள். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மாறிமாறி தாவாச் சொத்துக்களில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்தை இடையூறு செய்ய முயன்று வருவதில் வயதான 1ம் மனுதாரரும் பெண்பாலான 2ம் மனுதாரரும் எதிர்மனுதாரர்களின் அக்கிரம செயலை மிகவும் கஷ்டப்பட்டு தடுத்து வருகின்றனர். மனுச் சொத்தில் மனுதாரர்களின் பாத்தியத்தையும் அனுபவத்தையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தொடர்ந்து இடையூறு செய்யப்போவதாக பிரஸ்தாபித்து வருகிறார்கள். தாவாச் சொத்து கிரைய காலம் முதல் மனுதாரர்களின் பாத்தியத்திலும் அனுபவத்திலும் தொடர்ந்து உள்ளது. எனவே பூர்வாங்க வழக்கும் வழக்கின் சமன்சீர்நிலையில் மனுதாரர்கள் பக்கமே உள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனுவில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள்தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. மனுச் சொத்து மற்றும் சில சொத்துக்கள் எதிர்மனு–தாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். மனுதாரர்கள்/ வாதி களால் தயாரிக்கப்பட்ட போலிஆவணங்கள் சட்டப்படி செல்லாது. எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட வழக்குச் சொத்துக்களில் விவசாயப் பணிகள் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகள் அனைத்து வழிகளிலும் இடையூறுகள் செய்து

வருகின்றனர். காவல் துறை அதிகாரிகள் உதவியுடன் மேலும் மேலும் விரட்டியும் வீண் வம்பு வழக்குகள் செய்தும் அடுக்கடுக்காக தொல்லைகள் கொடுத்தும் வருகின்றனர். மேலும் மனுச்சொத்தைப் பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளின் மோசடியான நடவடிக்கைகள் எதிர்மனுதாரர்களுக்கு தெரிந்து விட்டதால் தங்களின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கவும் முடிந்தவரை கிடைத்ததை சுருட்டிக் கொள்ளும் நினைப்பில் மனுதாரர்கள்/ வாதிகள் மனுச் சொத்தை மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட முயற்சித்தும் நடவடிக்கைகள் மேற் கொண்டு வருகின்றனர்.

(ஆ) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், மனுதாரர்கள்/வாதிகள்மீது தாக்கல் செய்த அ.வ.எண்.94/2020 வழக்கில் வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். எனவே நடவடிக்கைக்கான காரணங்களை அ.வ.எண்.94/2020 என்ற வழக்கில் கூறிவிட்டு மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்மீது தாக்கல் செய்த அ.வ.எண்.86/2021 என்ற வழக்கில் அதே நடவடிக்கைக்கான காரணங் களைக் கூறி தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது. எனவே மனுதாரர்களின் மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. மனுதாரர் எதிர்மனுதாரர்தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல், மனுதாரர்தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.25 வரை சான்றாவணங்களும் எதிர்மனுதாரர்தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.16 வரை சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

5. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. <u>தீர்வு:-</u>

மனுதாரர்தரப்பில் 'ஏ' மற்றும் 'பி' செட்யூல் சொத்துக்கள் முழுவதையும் 1ம் மனுதாரர் 25.04.1968ம் தேதிய கிரையப் பத்திரம் மூலமாகவும் 03.07.1968ம் தேதிய கிரையப் பத்திரம் மூலமாகவும் கிரையம் பெற்று கிரைய காலம் முதல் தனது சொந்த பாத்தியத்திலும் அனுபவத்திலும் வைத்து தொடர்ந்து எவ்வித இடையூறும் இன்றி சட்ட காலத்திற்கும் மேலாக அமைதியான முறையில் அனுபவித்து வருவதாகவும் தாவாச் சொத்தை தான் கிரையம் பெற்று அனுபவித்து வருவதில் தன் பெயரில் பட்டா ஏற்பட்டு தன் பெயரில் தீர்வை செலுத்தி சட்ட காலத்திற்கு மேலாகவே அமைதியான முறையில்

அனுபவித்து வருவதாகவும் இந்நிலையில் தனது மகளான 2ம் மனுதாரர் படித்து முடித்து வேலை இல்லாமல் இருந்ததில் தாவாச் சொத்தின் ஒரு பகுதியில் பண்ணை அமைத்ததில் அதற்கு மானிய கடன் பெற சொத்து பாத்தியம் வேண்டும் என்ற நிலையில் தான் கிரையம் பெற்ற சொத்தின் வடபுறத்தில் கீழ்புறத்தின் 'பி' செட்யூலில் கண்ட சொத்தை 2ம் மனுதாரருக்கு கிரையப் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து விட்ட தாகவும் அதுமுதல் 'பி' செட்யூல் சொத்து 2ம் மனுதாரர்/2ம் வாதி அனுபவத்திலும் பாத்தியத்திலும் இருந்து வருவதாகவும் தாவாச் சொத்து தரிசாக இருந்ததில் அதனை கிரையம் பெற்று நிலத்தை பயன்படுத்தி விவசாயம் செய்து தான் அனுபவித்து வந்ததில் நாளடைவில் யூகலிப்டஸ் மரங்களை வைத்து வளர்த்து அதன் பணப்பலன்களை பெற்று அனுபவித்து வந்த நிலையில் தாவாச் சொத்து குறித்து எதிர்மனுதாரர்கள் தேவையில்லாத வீண் பிரச்சினைகளைக் கடந்த 2016ம் ஆண்டுக்கு பிறகு செய்து வந்ததில் காவல் துறையினர் தாவாச் சொத்தை சர்வேயர் வைத்து அளவீடு செய்ய வேண்டும் என்று கூறியதன்பேரில் தாவாச் சொத்தை சர்வேயர், விஏஓ உதவியுடன் அளவீடு செய்ததில் பிரதிவாதிகளின் இடம் தாவாச் சொத்தில் வரவில்லை என்று கூறிவிட்டதாகவும் இதனால் பிரதிவாதிகள் தாவாச் சொத்தில் 1ம் மனுதாரரின் பாத்தியதையையும் அனுபவத்தையும் பல்வேறு வகையில் இடையூறு செய்து வருவ தாகவும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அடியாட்கள் துணையுடன் வந்து எப்படி யேனும் தபசில் சொத்துக்களை ஆக்கிரமித்து கைப்பற்றுவோம் என்று பகிரங்கமாகக் கூறி வருவதாகவும் எனவே மனுச் சொத்துக்களில் இடைக்கால உறுத்துக்கட்டளை மற்றும் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுச் சொத்து மற்றும் சில சொத்துக்கள் எதிர்மனு–தாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றும் மனுதாரர்கள்/வாதிகளால் தயாரிக்கப்பட்ட போலிஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றும் எதிர்–மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட வழக்குச் சொத்துக்களில் விவசாயப் பணிகள் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகள் அனைத்து வழிகளிலும் இடையூறுகள் செய்து வருவதாகவும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், மனுதாரர்கள்/வாதிகள்மீது தாக்கல் செய்த அ.வ.எண்.94/2020 வழக்கில் வாதிகள், பிரதிவாதிகளுக்கு

எதிராக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே நடவடிக்கைக்கான காரணங்களை அ.வ.எண்.94/2020 என்ற வழக்கில் கூறிவிட்டு மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்மீது தாக்கல் செய்த அ.வ.எண். 86/2021 என்ற வழக்கில் அதே நடவடிக்கைக்கான காரணங்களைக் கூறி தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றும் எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

8. மனுதாரர்தரப்பில் மனுச் சொத்து தங்களுக்குப் பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் 1ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரங்களின் நகல்கள் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 ஆகவும் ராஜலட்சுமி என்பவரில் பெயரில் ஏற்பட்ட ஒத்திப்பத்திரம் ம.சா.ஆ.4 ஆகவும் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பணப்பற்று ரசீது ம.சா.ஆ.5 ஆகவும் 2ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரங்களின் நகல்கள் ம.சா.ஆ.6 ஆகவும் 1ம் மனுதாரர் பெயரில் உள்ள பட்டா ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.11 ஆகவும் 1ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் ம.சா.ஆ.8 ஆகவும் 1ம் மனுதாரர் பெயரில் உள்ள அடங்கல் கணக்கு நகல் ம.சா.ஆ.9 ஆகவும் 1ம் மனுதாரர் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு ம.சா.ஆ.10 ஆகவும் 2ம் மனுதாரர் பெயரில் உள்ள பட்டா ம.சா.ஆ.12 ஆகவும் 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது ம.சா.ஆ.13 ஆகவும் 2ம் மனுதாரர் பெயரில் ஏற்பட்ட அடங்கல் கணக்கு நகல் ம.சா.ஆ.14 ஆகவும் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் குறிப்பாணை ம.சா.ஆ.15 ஆகவும் 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர்கள்மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மற்றும் புகார் மனு ரசீது ம.சா.ஆ.16 முதல் ம.சா.ஆ.18 ஆகவும் அ.வ.எண்.94/2020 வழக்கின் பிராது நகல் ம.சா.ஆ.19 ஆகவும் 1ம் மனுதாரர் மற்றும் 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது ம.சா.ஆ.20 முதல் ம.சா.ஆ.25 ஆகவும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

9. எதிர்மனுதாரர்தரப்பில் மனுச் சொத்து தங்களுக்குப் பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் அ.வ.எண்.94/2020 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கொடிவழி ஜாபிதா எ.ம.சா.ஆ.1 ஆகவும் சின்னத்தேவர் மற்றும் இருவர் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும் கிஸ்து ரசீதுகள் எ.ம.சா.ஆ.3 முதல் எ.ம.சா.ஆ.5 ஆகவும் ஆவண எண்.314/1944 உடைய கிரையப்பத்திரத்தின்

நகல் எ.ம.சா.ஆ.6 ஆகவும் ஆவண எண்.315/1968, 716/1968 உடைய கிரைய ஆவணங்களின் நகல்கள் எ.ம.சா.ஆ.7, எ.ம.சா.ஆ.8 ஆகவும் ஆவண எண்.933/2003 உடைய கிரைய ஆவணத்தின் நகல் எ.ம.சா.ஆ.9 ஆகவும் ஆவண எண்.890/2008 உடைய பணப்பற்று ரசீது எ.ம.சா.ஆ.10 ஆகவும் ஆவண எண்.67/2009 உடைய கிரையப் பத்திரத்தின் நகல் எ.ம.சா.ஆ.11 ஆகவும் 2 ம் எதிர்மனுதாரர் அருப்புக்கோட்டை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு எ.ம.சா.ஆ.12 ஆகவும் சக்கரைத்தேவரின் இறப்புச்சான்றிதழ் எ.ம.சா.ஆ.13 ஆகவும் காளியம்மாள் என்பவரின் வாரிசுச் சான்றிதழ் எ.ம.சா.ஆ.14 ஆகவும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் காளிமுத்து என்பவர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான சிகிச்சைக் கோப்பின் நகல் எ.ம.சா.ஆ.15 ஆகவும் காளிமுத்துவிற்குரிய டிஸ்சார்ஜ் சம்மரி எ.ம.சா.ஆ.16 ஆகவும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் மனு 'ஏ' மற்றும் 'பி' செட்யூல் சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர்களால் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனுவில் கண்ட மனுச் சொத்தைப் பொறுத்து இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அ.வ.எண். 94/20 என்ற வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் கண்ட சொத்துக்களில் கண்ட சொத்து, மேற்படி அ.வ.எண்.94/20 வழக்கில் உள்ள சொத்தாக நிலையில், இரு வழக்குகளிலும் ஒன்றாக இணைந்து நடத்தக் கோரி இம்மனுவின் மனுதாரர்கள்/ வாதிகளால் மேற்படி அ.வ.எண்.94/2020 வழக்கில் வ.வி.எண்.3/21 என்ற மனுத் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, மேற்படி இரு அசல் வழக்கு களும் ஒன்றாக இணைந்து நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மனுச்சொத்துக் களை மனுதாரர்கள்/வாதிகள் அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி களோ அவர்வகை ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இந்த வழக்கு முடியும் மட்டும் தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கக் கோரியும் இம்மனு முடியும்

மட்டும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. மனுதாரர்கள்தரப்பில் மனுச் சொத்து மனுச் சொத்துக்கள் இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் தங்களுக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து என்று கூறப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள்தரப்பில் மனுச் சொத்துக்கள் தங்களுக்கு பூர்வீகப் பாத்தியப்பட்ட சொத்து என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், இருதரப்பிலும் மனுச் சொத்து குறித்து பலமுறை பிரச்சினைகள் ஏற்பட்டு காவல் நிலையத்தில் இருதரப்பிலும் புகார்கள் கொடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

12. மனுதாரர்தரப்பில் மனுச்சொத்து 1968ம் வருடத்திய இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றும் தாவாச் சொத்து குறித்து 2016ம் ஆண்டுக்குப் பிறகு வாதிகள் தேவையில்லாத வீண் பிரச்சினைகள் செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்தரப்பில் மனுச் சொத்து குறித்து மனுதாரர்கள்/வாதிகள் மோசடியான போலி ஆவணங்களைத் தயார் செய்துள்ளதாகவும் தற்போது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் சட்டப்பூர்வ நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கவும் முடிந்தவரை கிடைத்ததை சுருட்டிக் கொள்ளும் எண்ணத்திலும் மனுதாரர்கள்/வாதிகள் மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட முயற்சித்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

13. மேற்கூறப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மனுதாரர் தரப்பில் இம்மனுவில் கண்ட சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள் நிலையில், எதிர்மனுதாரர்கள்தரப்பில் இம்மனுவில் கண்ட சொத்தில் ஒரு சொத்தைக் காட்டி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி அ.வ.எண்.94/2020 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இருவழக்குகளிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு, அவற்றின் அடிப்படையிலேயே இம்மனுவில் கண்ட சொத்து மனுதாரர்கள்/வாதி களுக்குப் பாத்தியப்பட்டதா? எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டதா? என்று தீர்மானிக்க முடியும். தற்போது இரு வழக்குகளிலும் வழக்கு விசாரணையே

மேற்கொள்ளப்படாமல் மனுச் சொத்து யாருக்குப் பாத்தியப்பட்டது என்று தீர்மானிக்கப் படாத நிலையில் உள்ளது. மேலும் மனுதாரர்கள்தரப்பில் முதன்மை தோற்ற வழக்கும் சமன்சீர் நிலையும் மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ளதாகக் கூறியிருந்தாலும் முதன்மை தோற்ற வழக்கும் சமன்சீர்நிலையும் மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ளதா? எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ளதா? என்பது குறித்து இருதரப்பிலும் நிரூபிக்கப் படவில்லை. எனவே முதன்மை தோற்ற வழக்கும், சமன்சீர்நிலையும் இருபக்கமும் சமநிலையில் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேலும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குச் சொத்து தங்களுக்குப் பாத்தியப்பட்டது என்பதாகக் கூறி ஆவணங்கள் தாக்கல் செய்திருந் தாலும் அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கின் விசாரணையின் போதே மனுச்சொத்து மனுதாரர்கள்/வாதிகளுக்குப் பாத்தியப்பட்டதா? எதிர்மனு–தாரர்கள்/பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டதா? என்று தீர்மானிக்க இயலும். எனவே மனுச் சொத்து குறித்து மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வெவ்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ள நிலையிலும், இருவழக்குகளும் விசாரணைக்கு தயாராக உள்ள நிலையிலும், மனுச்சொத்து குறித்து இருவழக்கு களிலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு, அவற்றின் அடிப்படையிலேயே இம்மனுவில் கண்ட சொத்துக்கள் குறித்து தீர்வு காண வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில், தற்போது மனுச் சொத்துக்களில் மனுதாரர்களின் அமைதியான அனுபவத்திற்கு எதிர்மனு–தாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்று இவ்வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரத்தை மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து

பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 17.02.2023 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

மனுதாரர், எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள் :_ இல்லை

மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள்:–

ம.சா.ஆ.1. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல்

ம.சா.ஆ.2. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல்

ம.சா.ஆ.3. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல்

ம.சா.ஆ.4. ராஜலட்சுமி என்பவரில் பெயரில் ஏற்பட்ட ஒத்திப்பத்திரத்தின் நகல்

ம.சா.ஆ.5. 1ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பணப்பற்று ரசீது நகல்

ம.சா.ஆ.6. 2ம் மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் நகல்

ம.சா.ஆ.7. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள பட்டா

ம.சா.ஆ.8 1ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள்

ம.சா.ஆ.9. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள அடங்கல் கணக்கு நகல்

ம.சா.ஆ.10. 1ம் மனுதாரர் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு

ம.சா.ஆ.11. 1ம் மனுதாரர் பெயரில் உள்ள பட்டா

ம.சா.ஆ.12. 2ம் மனுதாரர் பெயரில் உள்ள பட்டா

ம.சா.ஆ.13 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.14. 2ம் மனுதாரர் பெயரில் ஏற்பட்ட அடங்கல் கணக்கு நகல்

ம.சா.ஆ.15. அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் குறிப்பாணை

ம.சா.ஆ.16. 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர்கள்மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு

ம.சா.ஆ.17. 1ம் மனுதாரர் எதிர்மனுதாரர்கள்மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு

ம.சா.ஆ.18. புகார் மனு ரசீது

ம.சா.ஆ.19. அ.வ.எண்.94/2020 வழக்கின் பிராது நகல்

ம.சா.ஆ.20. 1ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.21. 1ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.22. 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.23. 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.24. 1ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

ம.சா.ஆ.25. 2ம் மனுதாரர் பெயரில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீது

எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள்:– இல்லை

எதிர்மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள்:–

எ.ம.சா.ஆ.1. அ.வ.எண்.94/2020 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கொடிவழி ஜாபிதா

எ.ம.சா.ஆ.2.சின்னத்தேவர் மற்றும் மூன்றுபேர் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் நகல்

எ.ம.சா.ஆ.3. கிஸ்து ரசீது

எ.ம.சா.ஆ.4. கிஸ்து ரசீது

எ.ம.சா.ஆ.5. கிஸ்துரசீது

எ.ம.சா.ஆ.6. ஆவண எண்.314/1944 உடைய கிரையப்பத்திரத்தின் நகல்

எ.ம.சா.ஆ.7. ஆவண எண்.315/1968 உடைய கிரைய ஆவணத்தின் நகல்

எ.ம.சா.ஆ.8. ஆவண எண்.716/1968 உடைய கிரைய ஆவணத்தின் நகல்

எ.ம.சா.ஆ.9. ஆவண எண்.933/2003 உடைய கிரைய ஆவணத்தின் நகல்

எ.ம.சா.ஆ.10. ஆவண எண்.890/2008 உடைய பணப்பற்று ரசீது

எ.ம.சா.ஆ.11. ஆவண எண்.67/2009 உடைய கிரையப் பத்திரத்தின் நகல்

எ.ம.சா.ஆ.12. 2ம் எதிர்மனுதாரர் அருப்புக்கோட்டை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு

எ.ம.சா.ஆ.13. சக்கரைத்தேவரின் இறப்புச்சான்றிதழ்

எ.ம.சா.ஆ.14. காளியம்மாள் என்பவரின் வாரிசுச் சான்றிதழ்

எ.ம.சா.ஆ.15. அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் காளிமுத்து என்பவர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான சிகிச்சைக் கோப்பின் நகல்

எ.ம.சா.ஆ.16. காளிமுத்துவிற்குரிய டிஸ்சார்ஜ் சம்மரி

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.1/21 இன்
அ.வ.எண்.86/2021
உத்தரவு நாள் – 17.02.2023.